[1979 அக்டோபர் 27

தஞ்சை மாவட்டத்தில் கடல் சார்புள்ள இரசாயனத் தொழிற்சாலை.

வினா எண் 20-ஆ. திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் உருவாக்கப்படவிருக்கும் மெரைன் காம்ப்ளெக்ஸ் தொழிற்சாலைக்கான திட்டமதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) மத்திய அரசு உதவி உண்டா ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மெரைன் காம்ப்ளக்ஸ் தொழிற்சாலைக்காகும் திட்ட மதிப்பீடு குறித்து இப்போது உறுதியிட்டுக் கூறுவதற்கு இல்லை.

(ஆ) மத்திய அரசு, உப்பு நிதியிலிருந்து உதவி அளிக்கக் கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் அமைக்க இருக்கும் 'மெரைன் காம்பளக்ஸ் தொழிற் சாலை' மிகவும் முக்கியமானது. அது பற்றிய தெளிவான விவரங்கள் அரசிடம் இருந்தால் அறிவிக்க முடியுமா? அது எப்போது கட்டி முடிக்கப்படும் என்ற குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் முதல் முத்துப்பேட்டை வரை கடலை ஒட்டி உள்ள 60,000 ஏக்கர் சதுப்பு நிலத்தில் ஆண்டு தோறும் 10 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பெரிய நவீன உப்பளத்தையும் அந்த உப்பை அடிப்படையாகக் கொண்டு பல இரசாயன ஆலைகளையும் நிறுவுவது சாத்தியம் என டிட்கோ 1976-ல் அரசிற்கு ஒரு அறிக்கை தந்தது. ஆனால் காட்டிலாகா இவ்வாறு பெரிய ஆலைகளை நிறுவினால் அது அங்கு மட்டும் வளரும் ஒரு சில வகை மரங்களையும் அய்ரோப்பா (ஈரோப்) முதலிய இடங்களிலிருந்து பறவைகள் வருவதையும் பாதிக்கும் என்றும் இதனால் இயற்கை சமநிலை பாதிக்கப்படும் என்றும் தெரிவித்தது.

எனினும், சதுப்பு நிலத்தின் மேற்குக் கோடியில் உள்ள வடக்காடு, மரவக்காடு கிராமங்களில் உள்ள 6,000 ஏக்கர் சதுப்பு நிலத்தில் உப்பளம் நிறுவினால் அது குறிப்பிட்ட மரங்களின் வளர்ச்சியையோ அல்லது பறவைகளின் வருகையையோ பாதிக்காது என உயர் அதிகாரிகள் அந்த இடங்களைப் பார்வையிட்டு வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் டிட்கோ தெரிவித்தது.

1979 அக்டோபர் 27]

இக்கருத்தை காட்டிலாகாவும் ஏற்றுக் கொண்டது. அதன்படி வடக்காடு, மரவக்காடு ஆகிய கிராமங்களில் உள்ள 5,400 ஏக்கர் சதுப்பு நிலப் பகுதியில் ஒரு பெரிய உப்பளம் நிறுவுவதற்கு அரசு 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒப்புதல், அளித்து, இத் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை தமிழ் நாடு உப்பு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. உப்பு நிறுவனமும் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இந்த உப்பு உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்பது தமிழ்நாட்டில் முக்கியமான ஒரு பெரும் திட்டமாக கருதப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் என்ற இடத்தி லும், மகாபலிபுரத்தில் ஒரு இடத்திலும் (குறுக்கீடு)கேளம் பாக்கம் ஆகிய 3 இடங்களிலும் அமைப்பது என்று திட்ட மிட்டு, சால்ட் கார்ப்பரேஷன் அமைத்து, உப்பு உற்பத்தி செய்வது என்று திட்டமிடப்பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் எப் போது போடப்பட்டது? மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டத்தின் மூலம் உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டதா என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் அறிவிப்பார்களா ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் அதற்கு வேண் டிய பதில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விவரங்கள் எதுவும் இல்லை என்று பாராளுமன்றச் செயலாளர் சொல்கி றார். விவரங்கள் தருவதற்கு முதலமைச்சர் ஏன் வந்து இருக்கக் கூடாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி தஞ்சாவூர் மெரைன் காம்ப்ளக்ஸ் பற்றியது. மகாபலிபுரத்தில் சால்ட் கார்ப்பரேஷன் அமைப்பது பற்றி அல்ல—எதிர்க்கட்சித் தலைவர் தனிக் கேள்வி போட்டால் முதலமைச்சரின் பேரவைச் செயலர் பதில் அளிப்பார்.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர், சாதிக் பாட்சா கேட்ட கேள்வியை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். அவர் கேட்ட கேள்வியில் மகாபலிபுரத்தில் இந்தத் திட்டம் தொடங்கப் பட இருக்கிறதா என்று உள்ளது. இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வ ளவு என்பது திரு. சாதிக்பாட்சாவின் கேள்வி.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, விவரம் சொல்வதற்கு முதலமைச்சர் ஏன் வரவில்லை என்று அக்கறை காட்டி எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்கு நன்றி தெரிவித்து, உடல் நலம் இல்லாத காரணத்தால் வரவில்லை என்ற செய்தியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்புகள்.

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளின் 6 (1) வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. கு. வடிவேல்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. பொ. விஜயராகவன்

ஆ. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 193(1)-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1979-80-ம் ஆண்டுக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதல் அமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்